[1973 நவம்பர் 22

Vacancies of High School Assistants

* 35. Q.—THIRU M. SANKARALINGAM : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that vacancies of High School Assistants in ' B ' Wing schools in Chingleput District, for the academic year 1972–73, have not been filled up till August 1972;

(*b*) if so, the number of vacancies, and

(*c*) the reasons therefor?

காலியாகவுள்ள உயர்நிலைப்பள்ளி ஆசிரியர் பதவியிடங்கள்

திரு. எம். சங்கரலிங்கம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) செங்கற்பட்டு மாவட்டம், 'பி' (B) பிரிவுப் பள்ளிகளில் 1972-73 கல்வியாண்டில் காலியாகவுள்ள உயர்நிலைப்பள்ளி ஆசிரியர் பதவியிடங்கள் 1972 ஆகஸ்டு திங்கள் வரையிலும் நிரப்பப்படாமல் உள்ளன என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், காலியிடங்கள் எத்தனை ?

(உ) அதற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) 167 பணியிடங்கள்.

(உ) இவற்றிற்கு மாவட்ட வேலை தேடித்தரும் நிலையத்தாரால் அனுப்பப் பட்ட விண்ணப்பதாரர்களை நேரடித் தேர்வு நடத்தி, 6—8—1972-ல் 157 பேர்களை சென்னை முதன்மைக்கல்வி அலுவலர் நியமனம் செய்தார். மீதியுள்ள 10 கணக்கு ஆசிரியர் பதவிக்கு தகுதியானவர்கள் கிடைக்காததால், முழுத் தகுதியில்லாதவர்களால் 15—9—1972-ல் கணக்கு ஆசிரியர் பதவிகள் நிறைவு செய்யப்பட்டன.

திரு. செ. முத்துசாமி : தலைவரவர்களே, பள்ளிகளில் காலி இடங்கள் ஏற்படும்போது, அதைக் கணக்கிட்டு பின்னர் அதுபற்றி மாநில அரசுக்குத் தெரிவிக்கப்பட்டு, பின்னர் போஸ்ட்டுகள் 'ஸாங்ஷன்' செய்யப்பட்டு, இதற்குப் பின்னர் அந்தப் பள்ளிகளிலுள்ள காலி ஸ்தானங்களுக்கு ஆசிரியர்களைப் போடுவது என்ற நிலையில் காலி இடங்களை நிரப்புவதில் பெரும் காலதாமதம் ஆகின்றது. இதைத் தவிர்க்க பள்ளிகளில் பிள்ளைகளைச் சேர்த்தவுடன், அதாவது ஜூன் மாத இறுதிக்குள் காலி இடங்களுக்கு ஆசிரியர்களை

1973 நவம்பர் 22]

நியமிப்பதற்கான நடவடிக்கைகள் முடிந்து பள்ளி திறக்கும்போது காலிஇடங்கள் நிரப்பப்படும் நிலையை ஏற்படுத்துவதற்கு வேண்டிய நடவடிக்கையை அரசு எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இதை உணர்ந்துதான், பள்ளிகள் ஜூன் திங்களிலேயே திறந்துவிடுவதன் காரணமாக, காலி ஸ்தானங்களின் எண்ணிக்கையை முன் கூட்டியே ஆராய்ந்து, பள்ளிகள் திறக்கப்பட்ட ஒரு திங்களுக்குள் ஆசிரியர்கள் நியமிக்கப்படுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று இப்போது கூறப்பட்டுள்ளது. 24—6—1972-க்குப் பிறகு இதுபற்றிச் சொல்லப்பட்டு, நேர்முகத் தேர்விற்கு அழைப்பதற்கு என ஒரு மாதம், பிறகு தேர்ந்தெடுப்பதற்கு ஒரு மாதம் என்று வீண் காலதாமதம் வேண்டாம் என்று சொல்லப்பட்டுள்ளது. இதுபற்றிய கருத்துக்கள் கவனத்தில் கொள்ளப்பட்டு விரைவில் இதை நிறைவு செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

திரு. வி. வெங்கா: மாண்புமிகு தலைவரவர்களே, முதன்மைக் கல்வி அதிகாரி இவ்வளவு ஆசிரியர்கள் தேவை என்று கணக்கிட்டு பின்னர் வேலை தேடித்தரும் ஸ்தாபனத்திற்கு எழுதி இவ்வளவு ஆசிரியர்கள் தேவை என்று கேட்கும் நேரத்தில், அவர்கள் சிலரை அனுப்புகின்றார்கள். அவர்களில் பலர் தகுதி பெருதவர்கள் என்று கருதி, அவர்கள் வேண்டாமென்று திருப்பி அனுப்பப்பட்டு, பின்னர் தேர்வு பெருத ஆசிரியர்களையும் நியமிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகின்றது. அதற்காக மீண்டும் ஒரு முறை வேலை தேடித்தரும் ஸ்தாபனத்தை அணுக வேண்டியுள்ளது. எனவே முதன்முறை அவர்களுக்கு எழுதும் நேரத்திலேயே தேர்வுபெற்றவர்கள் தேர்வு பெருதவர்கள், ஆக இவர்கள் இருவரையுமே அனுப்புங்கள் என்று எழுதினல், இதில் ஓரளவிற்கு ஏற்படக்கூடிய கால தாமதத்தைத் தவிர்க்க முடியும் என்று கருதி, அதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, நாம் முதலில் கேட்கிறபோது, தேர்வு பெற்றவர்களுடைய பட்டியலை அனுப்பி வையுங்கள் என்று தான் கேட்க முடியும். அவர்களிலே போதுமான அளவிற்கு எடுத்துக்கொண்ட பிறகும், இடங்கள் காலியாக இருக்குமானல், தேர்வு பெருதவர்களின் பட்டியலைக் கேட்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. முதலில் இரண்டு பட்டியலையும் தாருங்கள் என்று கேட்பது முறையாக இருக்காது.